**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. TAMILNADU CEMENTS CORPORATION LIMITED (ALANGULAM LIMESTONE MINES), G.O.NO.427, ALANGULAM, LAKSHMIPURAM AND EDIRKOTTAI VILLAGES OF VEMBAKOTTAI TALUK, NARNAPURAM, PERNAICKENPATTI AND DURAISAMYPURAM VILLAGES OF SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 22.02.2024, 01.00 P.M AT PERIYATHAI KANDASAMY KALYANA MANDAPAM, 3/367-A, MANAVALAN THOTTAM, ALANGULAM VILLAGE, RAJAPALAYAM VIA, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M. Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | P.Muthupandeeswari | : | Tahsildar,<br>Vembakottai Taluk.<br>Virudhunagar |
| 5 | V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |

Public, Project proponent 165 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s.Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines), G.O.No.427, Alangulam, Lakshmipuram and Edirkottai Villages of Vembakottai Taluk, Narnapuram, Pernaickenpatti and Duraisamypuram Villages of Sivakasi Taluk, Virudhunagar District was held at Periyathai Kandasamy Kalyana Mandapam, 3/367-A, Manavalan Thottam, Alangulam Village, Rajapalayam Via, Vembakottai Taluk, Virudhunagar District. The District

Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 12.01.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines), G.O.No.427, to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

1. Thiru.Ramasamy, Sankaramoorthypatti:

Thiru.Ramasamy said that he worked in this cement plant for 34 years and that this meeting is being held for this cement plant to function again. He welcomed this project.

2. Thiru.Pazhanisamy, Uppuppatti:

Thiru.Pazhanisamy said that good projects should be accepted. If any grievances are addressed they will rectify it. He told that the livelihood of the people will improve and employment opportunities will come and welcomed this project.

3. Thiru.Pavunraj, Achamthavizhthan:

Thiru.Pavunraj said that the meeting is being conducted without any prior notice to public of the surrounding area and further told that there is an opportunity of earthquake in Virudhunagar District due to the functioning of more quarries. Hence, he requested to cancel the permission to this project.

4. Thiru.Krishnasamy, Alangulam (Owner of M/s.Krishna Hotel):

Thiru.Krishnasamy said that earlier more than 500 people worked in this cement plant and now this cement plant is not running. Hence, to give continuous employment, this plant should function continuously. He requested to give permission for this project for the continuous running of cement plant.

5. Thiru.Welcome Kannan (Co-ordinator of security committee):

Thiru.Welcome Kannan said that how you are conducting this meeting when IBM has already reported that there is no limestone at this project locations. He also asked, why this limestone mining project is being implemented now and told that the propose of starting this project is not clear mentioned. He also said that due to operation of the cement plant, the surrounding areas are already polluted with heavy dust and this will spread disease to the public. He also asked that which route used will be used to transport the quarried minerals. Also, told that nothing has been mentioned about the development fund. Further, he asked that, whether this limestone quarry will function only for Alangulam cement plant's use only.

6. Thiru.G.Kumar, Ethirkottai:

Thiru.G.Kumar said that the Alangulam cement plant was operated well in the past and requested employment for local public. Further, the told that quarries in surrounding area are

not operated as per Rules and further said that water sources will be destroyed due to deep mining activity. He also said that, the continuous movement of heavy loaded trucks carrying limestones from the quarry will create traffic problem. This project of shall support for no pollution and helpful for water supply. Therefore, he requested that this project should be done without polluting Environment.

7. Thiru.Manimaran (District Secretary of Puratchi Bharatham Party):

Thiru.Manimaran told that there will be employment opportunity due to this project. There is no second opinion that Government Law College shall be built up instead of this project. By doing this, our village students will study law. Further, he told that during the rainy season, if 200 lorries carry loads through these roads, the road will be damaged. Finally, he said that, upcoming of this project will affect the human liveshood. Hence, he asked to cancel the approval for this project.

After that since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written.

With this, the meeting came to the end.

29.2.2024
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 13 – pages, 165 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம், ஆலங்குளம், லட்சுமிபுரம் மற்றும் எதிர்கோட்டை கிராமங்கள் மற்றும் சிவகாசி வட்டம், நாரணாபுரம், பேர்நாயக்கன்பட்டி மற்றும் துரைசாமிபுரம் கிராமங்களிலும் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - I, அரசாணை எண் : 427 ) அவர்களால் 268.80.0 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் தொடர்பாக 22.02.2024 பிற்பகல் 01.00 மணியளவில் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. மு. சிவகுமார் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர் |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர். |
| 5 | செல்வி.வே. கலைஜோதி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 165 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வெம்பக்கோட்டை வட்டம், ஆலங்குளம், லட்சுமிபுரம் மற்றும் எதிர்கோட்டை கிராமங்கள் மற்றும் சிவகாசி வட்டம், நாரணாபுரம், பேர்நாயக்கன்பட்டி மற்றும் துரைசாமிபுரம் கிராமங்களிலும் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - I, அரசாணை எண் : 427) நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 22.02.2024 பிற்பகல் 01.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் மற்றும் ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 12.01.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு,

அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - I, அரசாணை எண்: 427) நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. திரு.ராமசாமி, சங்கரமூர்த்திப்பட்டி:

திரு.ராமசாமி அவர்கள், 34 வருடம் இந்த ஆலையில் வேலை பார்ப்பதாகவும், இதுவரை இல்லாமல் இப்போது இக்கூட்டம் நடைபெறுவது இந்த ஆலை மீண்டும் செயல்படுத்துவதற்காகவே எனத் தெரிவித்தார். மேலும், இந்த குவாரி அமைவதற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

2. திரு.பழனிச்சாமி, உப்புப்பட்டி:

திரு.பழனிச்சாமி அவர்கள், எந்த நல்ல திட்டம் வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறைகளை சொல்லுங்கள் அதை நிவர்த்தி செய்வார்கள் எனவும் கூறினார். மேலும், இத்திட்டம் வருவதால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

3. திரு.பவுன்ராஜ், அச்சம்தவிழ்த்தான்:

திரு.பவுன்ராஜ் அவர்கள், சுற்று வட்டார பகுதி மக்களுக்கு முன்னறிவிப்பின்றி இக்கூட்டம் நடைபெறுவதாகவும் இவ்வாறு விருதுநகரில் அதிக குவாரிகளின் செயல்பாட்டினால் நிலநடுக்கம் வரும் எனவும் கூறி இத்திட்டத்தினை ரத்து செய்யுமாறு அவரது கருத்தினை தெரிவித்தார்.

4. திரு.கிருஷ்ணசாமி, ஆலங்குளம் ( தி/ள்.கிருஷ்ணா ஹோட்டல் உரிமையாளர்):

திரு.கிருஷ்ணசாமி அவர்கள், அந்த காலத்தில் 500க்கும் மேற்பட்டடோர் இந்த ஆலையில் வேலை பார்த்தனர் எனவும், தற்போது இந்த ஆலை இயங்கவில்லை எனவும் கூறினார். எனவே மக்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் ஆகவே தொடர்ந்து ஆலை இயங்க அரசாங்கம் இத்திட்டத்திற்கு அனுமதி தருமாறு கேட்டுக்கொண்டார்.

5. திரு.வெல்கம் கண்ணன் (ஆலை பாதுகாப்பு கமிட்டி ஒருங்கிணைப்பாளர்):

திரு.வெல்கம் கண்ணன் அவர்கள், ஏற்கனவே IBM ஆனது தற்போது சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமையும் இந்த இடத்தில் சுண்ணாம்புக்கல் இல்லை என அறிக்கை கொடுத்துள்ளதாகவும் தற்போது எப்படி சுண்ணாம்புக்கல் இங்கு இருப்பதாக இக்கூட்டம் நடத்துகின்றனர் என்று கேள்வி வைத்தார். மேலும், இந்த சுண்ணாம்புக்கல் சுரங்க திட்டம் தற்போது எதற்கு செயல்பாட்டிற்கு வருகிறது மற்றும் அதன் நோக்கம் பற்றி தெளிவாக குறிப்பிடாதது ஏன் எனவும் வினவினார். ஏற்கனவே சிமெண்ட் ஆலையின் செயல்பாட்டினால் சுற்றியுள்ள பகுதிகளில் தூசு படிந்துள்ளதாகவும், இதனால் மக்களுக்கு நோய் பரவும் எனவும் கூறினார். மேலும், எந்த பாதையில் கனிமங்களை ஏற்றி செல்வார்கள் எனக் கேட்டார் மற்றும் மேம்பாட்டு நிதி பற்றி குறிப்பிடப்படவில்லை எனவும் இந்த ஆலை செயல்பாட்டிற்காக மட்டுமே இந்த சுரங்கங்கள் இயங்குமா எனவும் கேட்டுக்கொண்டார்.

6. திரு.G.குமார், எதிர்க்கோட்டை:

திரு.குமார் அவர்கள், சிமெண்ட் ஆலை சிறப்பாக செயல்பட்டது எனவும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்குமாறும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து சுற்றுவட்டார பகுதியிலுள்ள குவாரிகள் அனைத்தும் விதிப்படி இயங்கவில்லை எனவும், அதிக ஆழம் தோண்டி கனிம வளங்களை எடுத்தால் குடிநீர் ஆதாரம் அழிந்து விடும் என கூறினார். மேலும், குவாரியிலிருந்து கற்களை எடுத்துக்கொண்டு அதிக லாரிகள் தொடர்ந்து செல்வதால் பயண நெருக்கடி ஏற்படும் எனவும் தூசு பரவாமலும், குடிநீர் ஆதாரத்திற்கு உறுதுணையாகவும் இத்திட்டமானது அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

7. திரு.மணிமாறன் (புரட்சி பாரதம் கட்சியின் மாவட்ட செயலாளர்):

திரு.மணிமாறன் அவர்கள், இத்திட்டம் வருவதால் வேலைவாய்பபு கிடைக்கும் அதில் மாற்று கருத்து இல்லை, ஆனால் இத்திட்டம் வருவதற்கு பதிலாக இதே இடத்தில் அரசு சட்டக் கல்லூரி கட்டலாமே என கேட்டார், இவ்வாறு கட்டினால் மாணவர்கள் சட்டம் பயிலுவார்கள் என்றும் தெரிவித்தார். மேலும், மழைக்காலங்களில் இந்த சாலைகளின் வழியே லோடு ஏற்றிக்கொண்டு 200 லாரிகள் சென்றால் அங்குள்ள சாலைகளின் நிலைமை என்னவாகும் எனவும் இத்திட்டம் வருவதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் எனவும் கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

29.2.2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 13 பக்கங்கள், 165 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).